ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

வடகலை ஸம்ப்ரதாய

# சாற்றுமுறை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# சாற்றுமுறை

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து ⋆ உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் ⋆
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து ⋆ நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது ⋆
இற்றைப் பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா ! ⋆
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் ⋆ உன்றன்னோ -
டுற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் ⋆
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை ⋆
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி ⋆
அங்கப் பறை கொண்டவாற்றை ⋆ அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன ⋆
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே ⋆
இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள் ⋆
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் ⋆
எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் எம்பாவாய்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும் ⋆
    பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின்வல மார்பினில் ⋆
    வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
    சுடராழியும் பல்லாண்டு ⋆
படைபோர் புக்கு முழங்கும் ⋆
    அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

ஸர்வதே$_3$ஶத$_3$ஶாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா ।
ராமாநுஜார்யதி$_3$வ்யாஜ்ஞா வர்த$_4$தாமபி$_4$வர்த$_4$தாம் ॥

ராமாநுஜார்யதி$_3$வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா ।
தி$_3$க$_3$ந்தவ்யாபிநீ பூ$_4$யாத்ஸா ஹி லோகஹிதைஷிணீ ॥

ஶ்ரீமந் ஶ்ரீரங்க$_3$ஶ்ரியமநுபத்$_3$ரவாமநுதி$_3$நம் ஸம்வர்த$_4$ய ।
ஶ்ரீமந் ஶ்ரீரங்க$_3$ஶ்ரியமநுபத்$_3$ரவாமநுதி$_3$நம் ஸம்வர்த$_4$ய ॥

நமோ ராமாநுஜார்யாய வேதா$_3$ந்தார்த$_2$ப்ரதா$_3$யிநே ।
ஆத்ரேயபத்$_3$மநாபா$_4$ர்யஸுதாய கு$_3$ணஶாலிநே ॥

ராமாநுஜத$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$யபூ$_4$ஷணம் ।
ஶ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥

வாழி இராமநுசப் பிள்ளான் மாதகவால்
    வாழும் ⋆ அணிநிகமாந்தகுரு - வாழியவன் ⋆
மாறன் மறையும் இராமானுசன் பாடியமும்
    தேறும் படியுரைக்கும் சீர்

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே ⋆
    மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே ⋆
கஞ்சத் திருமங்கை உகக்கவந்தோன் வாழியே ⋆
    கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே ⋆
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே ⋆
    திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே ⋆
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே ⋆
    செந்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே

நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ ⋆
    மாநகரின் மாறன் மறைவாழ ⋆ - ஞானியர்கள்
சென்னியணி சேர் தூப்புல் வேதாந்த தேசிகனே
    இன்னுமொரு நூற்றாண்டிரும்

வாழியணி தூப்புல் வரு நிகமாந்தாசிரியன் ⋆
    வாழியவன் பாதாரவிந்தமலர் ⋆ - வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
    தீதிலா நல்லோர் திரள்

வாதாசனவர ரிவரென வருமா பாடியம் வகைபெறுநாள் ⋆
    வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசி அறிந்திடுநாள் ⋆
பேதா பேதம் பிரமமெனாவகை பிரமந் தெளிவுறுநாள் ⋆
    பேச்சொன்றுக்குச் சததூசணியைப் பேசிய தேசிகநாள் ⋆
தீதாகிய பலமாயக் கலியைச் சிக்கென வென்றிடுநாள் ⋆
    திக்கெட்டும் புகழ் ச்ரீபாசியத்தைத் தெளியவுரைத் திடுநாள் ⋆
ஓதாதோதும் வேதாந்தாரியன் உதயம் செய்திடுநாள் ⋆
    உத்தமமான புரட்டாசித் திருவோணம் எனுநாளே

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர் ⋆
சோதி மணி மாடம் தோன்றும் ஊர் ⋆ - நீதியால்
நல்ல பத்தர் வாழும் ஊர் ⋆ நான்மறைகள் ஓதுமூர் ⋆
வில்லிபுத்தூர் வேதக் கோனூர் ⋆
பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும் ⋆
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் ⋆ கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை ⋆
வையம் சுமப்பதும் வம்பு

திருவாடிப் பூரத்து சகத்துதித்தாள் வாழியே ⋆
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே ⋆
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே ⋆
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே ⋆
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே ⋆
உயர் அரங்கற்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே ⋆
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே ⋆
வண் புதுவை நகர்க் கோதை மலர்ப் பதங்கள் வாழியே

சாற்றுமுறை முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்